Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆ (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - சுகூ] பாற்ப்பானம்:- ஜயவருஷ தைமீ உஉ வெள்ளிக்கிழமை (4 FEP. 1955) [இல-சுசு]

# மொழிக்கொலைபுரிவதில் முதற்பரிசு யாருக்கு?

## 'தமிழ்' தமிழாக இருப்பதற்கு எழுத்தாளர்களின் கடமை

இன்று எம் நாட்டில் தமிழ்மொழி பல்வேறு வழிகளில் சிதைக்கப்படுதல் பலர் கண்டு வருந்தும் ஓர் உண்மை. ஈழத்தில் மாத்திரமல்ல இந்தியாவிலும் இப்படியே நடக்கின்றது. இதைக் கண்டு வருந்துகின்ற தமிழ்ப்பேரறிஞர் கலாநிதி மா. இராசமாணிக்கனர் அவர்கள் தமிழ்மொழி எவ்வாறு சிதைக்கப்படுகிறதென்பதற்கு உதாரணங்கள் காட்டி "தமிழ் வளர வழிகள்" என்னுந் தலையங்கத்தின்கீழ் "தமிழ்நாடு" நாளிதழில் அரிய அறிவுரையொன்று தந்திருக்கின்றார். அவர் காட்டியிருக்கும் உதாரணங்கள் ஈழநாட்டுக்கும் சாலப் பொருந்தும். ஆகவே அக்கட்டுரையைக் கீழே தருகின்றோம். அதை வாசித்து அவர் காட்டிய வழிகளிலே தமிழ மொழியை வளர்க்க முயலுதல் தமிழ் மக்கள் ஒவ்வொருவர் மீதும் பொறுத்த கடனாகும்.

தமிழ் நமது தாய்மொழி. ஈன்ற தாயைப் போற்றுதல் மக்களது கடமை. அது போலவே நமது பிறப்பு முதல் இறப்புவரையில் நமக்கு உறுதுணையாக இருந்து நம்மை வாழச்செய்யும் மொழியைக் காப்பதும் வாழ்விக்கச் செய்வதும் தமிழராகிய நமது கடமை.

### பேச்சுத் தமிழ்

இன்றைய தமிழரது வாழ்வில் தமிழ் எவ்வாறு இருக்கின்றது? ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு பேசும்போது பெரும்பாலும் பிறமொழிச் சொற்களைக் கலந்தே பேசுவதைக் காண்கிறோம். 'டிபன் ஆய்விட்டதா? உங்களுக்கு விவாகம் எப்பொழுது? காஷ்டா ஆய்விட்டதா?'' என்று பேசுவதைக் கேட்கின்றோம். இப் பிறமொழிச் சொற்கள் நம மொழியிற் கலந்து கலந்து தமிழ் நடையைக் கெடுத்து விடுகின்றன. 'சிற்றுண்டி' என்னும் தூய தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக 'டிபன்' (Tiffin) என்னும் ஆங்கிலச் சொல்லையோ, "காஷ்டா" என்னும் உருதுச் சொல்லையோ பேச்சு வழக்கில் பயன்படுத்தலால் சிற்றுண்டி என்னும் சொல்லின் தமிழ் வழக்கு நாளடைவில் ஒழிந்து விடுகின்றது. இவ்வாறே 'திருமணம்' என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக "விவாகம்" என்னும் வடமொழிச் சொல்லையோ, "மாரேஜ்" (Marriage) என்னும் ஆங்கிலச் சொல்லையோ பயன் படுத்தலால், திருமணம் என்ற சொல் நாளடைவில் வழக்கு ஒழிந்துவிடும். நம் வீட்டுக் கதிலையைப் பயன்படுத்தத் தவறி, எதிர்வீட்டுக் கத்தியையே பயன்படுத்தலால் நமது கத்தி பயன்படுவகையின்றித் துருப்பிடித்து நாளடைவில் கெட்டொழிதலைக் காண்கிறோம். இவ்வாறு பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதில் தலைசிறந்தவர் தமிழரே ஆவர். மொழிக் கொலை புரிவதில் முதற்பரிசுபெறத் தக்கவர் நம் தமிழரே ஆவர்.

சிலர் ஒருவரையொருவர் காணும்போது வணக்கம் எனகின்றார். ஆனல் பலர் 'நமஸ்காரம்' என்றும் 'நமஸ்தே' என்றும், 'வந்தனம்' என்றும் சொல்லுகின்றனர். வணக்கம் என்பது தமிழ்ச் சொல்; ஏனையவை மூன்றும் தமிழ்ச் சொற்களல்ல. 'அங்ஙனம் இருந்தும் படித்த தமிழருள் பலரும் பிடிவாதமாகப் பிறமொழிச் சொற்களையே பேசி வருகின்றனர்; 'வணக்கம் என்று கூறும் தமிழரைப் பிறமொழிகளை வெறுப்பவர் என்றும் ஏசுகின்றனர். இவர்களுக்குக் கடுகளவாவது தாய்மொழிப் பற்று இருக்குமாயின், இங்ஙனம் ஏசுவரோ? எண்ணிப்பாருங்கள். இவ்வாறு மக்களது பேச்சு வழக்கில் பிறமொழிச் சொற்கள் பல புகுந்து நிலைபெற்று விட்டன; சில நிலைபெற முயலுகின்றன.

பேச்சுத் தமிழே எழுத்துத் தமிழுக்கு அடிப்படை. ஆதலால் நமது பேச்சுத் தமிழ் பெரும்பாலும் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் எழுதும் தமிழ் நல்ல தமிழ்நடையில் இருக்க முடியும். இவ்வுண்மையைத் தமிழ் மக்கள் நன்கு நினைவிற் கொண்டு, தமது பேச்சுத் தமிழைத் திருத்திக் கொள்ளுதல் நல்லது.

### செய்தித் தாள்கள்

நம் தமிழ் நாட்டுச் செய்தித்தாள்களில் தமிழ்ப் புலமையுடையார் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம். அதனாலும் நல்ல தமிழை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் இன்மையாலும், மிகப்பலவாகிய பிறமொழிச் சொற்களைக் கலந்து தமிழ் எழுதி வருகிறார்கள். இவற்றைத் "தமிழ்ச் செய்தித் தாள்கள்" என்று கூறுவதற்குப் பதிலாக "கலப்பு மொழிச் செய்தித் தாள்கள்" என்று கூறுதலே பொருந்தும்.

இவ்வாறு செய்தித் தாள்களில் மொழிக்கொலை புரிவோர் வேற்று நாட்டவரல்லர்; வேறு மொழிபேசும் அயலாரல்லர்; தமிழகத்தில் பிறந்து தமிழிலேயே பேசி வரும் மக்களாவர் என்பதை வெட்கத்துடன் கூற வேண்டுபவராக இருக்கின்றோம். இவர்கள் இத்தமிழ்க் கொலையுடன் நில்லாது நல்ல தமிழில் எழுதுவோரைப் பிறமொழி வெறுப்பாளர் எனக் கூறுதலும்' பிறமொழிச் சொறகள்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

### பாடிகாவலர் தலைவர்

பாடிகாவலர் (பொலீஸ்) தலைவர் சேர். றிச்சேட் அலுவிகார ஓய்வு பெறுகின்றார். அவருடைய பதவியில் ஸ்ரீ ஒஸ்மண்ட் டி. சில்வா தற்காலிகமாக அமருவார்.

### வெங்காய இறக்குமதிக்குத் தடை

இலங்கையிலேயே போதுமான வெங்காயம் செய்யப்பட்டிருப்பதால் பம்பாய் வெங்காயம் தவிர ஏனைய வெங்காயங்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்படுமாம்.

### கோவாச் சத்தியாக்கிரகிகளுக்கு கொடிய தண்டனை

கோவா சத்தியாக்கிரகத்தின் இரண்டாம்படியாக வரிகொடா இயக்கம் தொடங்கியிருக்கின்றதாம். பெருந்தொகையினர்சிறையில் வைக்கப்படுகின்றனரென்றும் அவர்களுள் அறுவர் முறையீனமாக அடிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கின்றனரென்றும் அறியவருகிறது.

# தமிழ் மொழி வளர்ச்சிக்கு வழி

## தாய் மொழியைத் தமிழன் விரும்பிக் கற்பது

திரு. P. R தேவராசா
கொழும்புமாநகர்

உலக வழக்கொழிந்த சமக்கிருதம், கிபுறு, கிரேக்க மொழிகளாகிய மூன்றிலும் தமிழ்ச் சொற்கள் உண்டு. தமிழ்ச் சொற்களிலிருந்து தோன்றிய நூற்றுக்கணக்கான சொற்கள் இந்து ஐரோப்பிய மொழிகளுட் காணப்படுகின்றன. இது திராவிட மொழிக்கும் இந்து-ஐரோப்பிய மொழிகளுக்கும் உள்ள பழைய தொடர்பை வலியுறுத்துகிறது.

ரோமரின் வருகைக்கு முன் பிரித்தானியாவில் உள்ள அறிவும் புத்தியும் மிகுந்த மக்களை 'டிராவிட்' (Dravid) என்ற சொல்லால் குறிப்பிட்டார்கள். இச் சொல்லுக்கும் திரவிடம்' என்னும் சமக்கிருதச் சொல்லுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. பழந் திராவிடர் எவ்வாறு பெரிய பிருத்தானியாவுக்குப் போய் அவ்விடத்தைக் குடியேற்ற நாடாக்கி நாகரிகப் படுத்தினர்களென்பதை இது காட்டுகின்றது. (1) தென்னிந்தியாவே மனித சாதியின் தொடக்க இடம். (2) 20,000 வருடங்களுக்கு முன் இந்தியாவில் பேசப்பட்டமொழி பழந்தமிழின் மாற்றமடைந்த தமிழே (3) இந்தியத் திராவிடரின் ஒரு பகுதியினரே சுமேரியர் (4) மொகஞ்சதாரோவில் பேசப்படும் மொழி திராவிடமொழியே. (5) திராவிட நாகரிகத்தின் சின்னங்கள் பிலிப்பைன் தீவிலுள்ளன. (6) சுமத்திரா, ஜாவாத் தேசங்களின் நாகரிகம் திராவிட நாகரிகத்தோடு ஒற்றுமைப்பட்டுள்ளது: (7) மத்திய அமெரிக்காவின் மாயா நாகரிகமும் திராவிட நாகரிகத்தின் தொடர்ச்சியைக் காட்டுகிறது.

ஆராய்ச்சியாளரின் இவ்வித கூற்றுகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் தமிழர் எவ்வித நாகரீகமாக வாழ்ந்தார்களென்பதைக் குறிக்கின்றது. பாரதம், இராமாயணம் முதலிய நூல்களில் தமிழ் நாட்டைப்பற்றிக் குறிப்புகள் இருக்கின்றன. பாரத யுத்தம் கிறீஸ்து பிறப்பதற்கு 3077 வருடங்களுக்கு முன்பே நடந்திருக்கவேண்டும் என்று திரு. வி. வேங்கடாச்சாரியார் தமக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு எழுதியுள்ளார். கி. மு. 1500—2000 இடையில் நடந்திருக்குமென்றும் சிலர் கூறுகின்றனர். யார் எப்படிக் கூறிய பொழுதிலும் பாரத இராமாயண காலத்திலே தமிழும் தமிழ்நாடும்சிறப்புற்றுவிளங்கினவென்பது சொல்லாமலே விளங்குகின்றது.

இத்தகைய பழம் பெருமை வாய்ந்த தமிழ் மொழி

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். ஜய ஸூ தை மீ
உஉ ட வெள்ளிக்கிழமை


## இவர்களுக்குமா ?

அரசாங்க அலுவலாளர்களுக்கு வயது வந்தபின் ஓய்வெடுக்கும்போது உபகாரப் படி வழங்குவது வழக்கம். அறுபது ஆண்டு அடைந்த பின் வயது போன காலத்தில் முன் செய்த சேவையின் நல்வினைப் பயனை இந்த விதமாக உத்தியோகத்தர்கள் பெறுவது பொருத்தமானதே. இதுபோல வணிக சங்கங்களும் ஏனைய வேலை நிலையங்களும் அலுவலாளர்களுக்கு ஓய்வு காலப்படி உதவுவதும் உண்மையே. ஆனல் நாட்டின் நலனுக்காகத் தொண்டாற்ற முன்வந்த நல்லோர்களும் பணிசெய்து விலகும் பொழுது இவ்வகையான ஒரு உபகாரப் படி பெற வேண்டுமென்று எண்ணுவது ஆச்சரியத்தை விளைவிக்கின்றதோடு நகைப்புக்கும் இடமாகின்றது.

முன்னைக் காலத்தில் சட்டநிருபண நிருவாக சபையினர் படி பெறாது தம் வாழ்நாளை நாட்டிற்காகத் தியாகஞ் செய்தனர். அந்தத் தியாக சிந்தையுடன் அன்னர் செய்த தேசத் தொண்டு மதிப்புக்குரியதாயும் மக்கள் நலத்துக் குடம்பாடானதாயும் இருந்தது.

முற்போக்கென்றும் புதுமை எழுச்சியென்றும் சொல்லிக் கொண்டு அரசியல் வாதிகள் தேசத் தொண்டு புரிவதற்குப் படி வழங்குதல் முறையாகுமென உடுமெரோர் சோல்பரித் திட்டங்களை வகுத்தவர்கள் இட்ட விதிப்படி மக்கள் சார்பாக அரசியற் சபை பாராளுமன்றம் புகுந்த அங்கத்தவர்கள் தங்கள் பணிக்குக் கைம்மாறுகப் பணம் பெறுகின்றார்கள். இந்த ஒழுங்கைப் பற்றி இப்பொழுது நாம் ஒன்றுங் கூறுதல் பொருத்தமாகாது. ஆனல் நாட்டின் நலத்துக்காகப் பாராளுமன்றத்திற் பணியாற்றும் அங்கத்தவர்கள் தங்கள் பதவிகளை நீண்ட கால சேவைத் திட்டத்திலமைத்து ஓய்வு வேளைக்கு உபகாரப்படி பெறக்கருதுவதை நாம் கண்டிக்காது விடமுடியாது. தேச சேவையென்பதற்கு வரை

அரசியல் அரங்கு

# முச்சிங்கள முன்னணிக்குப் பதில்

# முத்தமிழ் விழாவில் முழக்கஞ் செய்வதுதானு?

'தமிழ் சிங்களம் சமஉரிமை உள்ளன' என்று சொல்லிக் கொண்டு நாம் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை என ஒரு வித ஆறுதல் கூறித்திரியும் அரசியல் வாதிகளின் அகத்துணர்ச்சி யென்ன? புறத்துடிப்பென்ன?

அரசியல் ஆதிக்கக் கட்சியில் அண்மையிலே சேர்ந்திருக்கும் திரு. வே. குமாரசுவாமி அவர்கள முச்சிங்கள முன்னணிக்குத் தமிழர்கள் ஏன் அஞ்ச வேண்டும் என்று கேட்கின்றார். முச்சிங்கள முன்னணிக்கு யாரும் அஞ்சவில்லையே. தமிழ் புறக்கணிக்கப்பட இடப்படும் திட்டத்தைக் கண்டும் தங்கள் காரியம பார்த்துக்கொண்டு ஒரு குறையுமில்லையென வார்ஜாலச் சொற்பெருக்காற்றி வரும தமிழ்ப் பின்னணியைக் கண்டல்லவா தமிழகம் பயப்படுகின்றது.

சைவமங்கையர்கழகத்திலே அமைச்சர் திரு. சு. நடேசன் அவர்கள் தமிழாவது தாழ்வுறுவதாவதென்று தைரியஞ் சொன்னர். கட்டனில் நடந்த தமிழ் விழாவில் தமிழினத்தை அசைக்க முடியாது என்று தட்டிக் கொடுத்துப் பேசினார். இவ்வளவும் போதாதா?

அரச சேவைக்கு உத்தியோகத்தர்களைத் தெரிந்தெடுக்கும் சோதனை (Clerical) இன்னுஞ் சில ஆண்டுகளிலே தாய்மொழியில் நடைபெறமல்லவா? அப்பொழுது தமிழினத்தின் நிலை யாதாகும் என்பதை இப்பொழுதே இந்தச் சாந்தி சாந்தி என்று சமாதானம் கூறும் அரசியல் வாதிகளிடம் மக்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

யறையுண்டா? நல்லெண்ணம் படைத்த சான்றோர் பொன்னே பொருளோ இல்லாதவர்களாய் இருக்கின்றார்களே. இவர்களின் உதவியை நாடுபெறாது நிற்பது கூடாது என்ற நியாயத்திற்காகப் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு ஓய்வுப்படி ஒழுங்கு வைத்தல் வேண்டுமா?

மக்களின் மதிப்பை ஒரு பொழுதும் இழந்துவிடாது பத்தாண்டுகளுககுமேலாக ஒருவர் பாராளுமன்றத்தில் அங்கத்தவராகத் தொடர்ந்து பணியாற்றுவது சுலபமாகாது. அன்னவர் எண்தொகை மிகவும் குறைந்ததாயிருக்கும் என்ற சமாதானத்தை நாம் ஏற்றுக் கொள்ளுதல் ஆகாது. அவ்வாறு தொண்டாற்றியவர்களுக்கு அத்தொகுதி மக்கள் பொற்கிழி அளித்து உதவி புரிதல கூடாதா? ஓய்வுப் படிக்காகமக்களின் வாக்குரிமையை மீண்டும் மீண்டும் அரசியல் வாதிகள் நாடாதிருப்பார்களா? தேச சேவைக்குக் கைமமாறு கொடுப்பது யார்? எவ்வாறு? இதற்கொரு திட்டம் வேண்டுமா?

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரை யன்றோ மக்கள் பரோபகாரிகளாகக் கருதுவார்கள். தமக்கென வாழுவதும் தமக்கெனப் பிறரையும வாழுதல் வேண்டும் என்று விரும்புவதும தேசத் தொண்டர்களின் நெறியாகுமா? எமது பண்டை வாழ்க்கைப் பண்பாட்டை மறந்து ஏனைய நாடுகளில் நடப்பதை எடுத்துக் காட்டாகக் கூறுதல் மரபாகுமா?

# வாழ்க்கை வானில்

— வளர்மதி

### எது ஆபத்து............?

தமிழுக்கு ஆபத்து! அப்படி யார் சொன்னர்? ஒரு பொழுதும் நடவாது! இந்தப் பல்லவி இப்பொழுது ஒவ்வொரு நாளும் பாடப்படுகின்றது. அமைச்சர்கள்தான் இதற்கு இராக அமைப்புக் கொடுத்துத் தாளம் போடுகிறார்கள். தபால் அமைச்சர், நீதித்துணை அமைச்சர் வீடமைப்பு அமைச்சர் ஒரே பல்லவியை வெவ்வேறிடங்களில் பாடிக் காட்டியிருக்கிறார்கள். இதுதான் இப்போது ஆபத்தாய்விட்டது!

### திட்டுக்குதவாதாம்!
### சுவபாஷைப் பேச்சலங்காரம்?

பாராளுமன்றத்தில் ஆங்கிலத்திற் பேச்சுப் போர் நடப்பதுவழக்கம். சுவபாஷையிலும் சொற்போர் புரியலாம் என்று காட்டுமுகத்தான் காலித் தொகுதி அங்கத்தவர் பாராளுமன்றத்தையே திட்டுக்குதவாதென்று சுட்டிக் காட்டிச் சுடச் சொன்னராம் கண்டித் தொகுதி அங்கத்தவர் சொன்னவரையே திட்டுக்குதவாதவர் என்று ஒட்டக்கூத்தர் முறையில் ஒட்டிப் பாடினராம்........!

### தாய்மொழி — தாய் நாடு!

யாழ்ப்பாண மாநகரசங்கத்தார் அலுவல்களைத் தாய்மொழியில் நடத்தினர்களல்லலவா? தாய் நாட்டுச் சுதந்திர தினத்தை மறப்பார்களா? குருநாக்கல் மாநகரசங்கம் களுத்துறை நகர சங்கம் முதலியன தாய் மொழிப்பற்றிருந்தும் தாய் நாட்டிற் பற்றிக்கொள்ள மாட்டார்கள். என்று கூட்டத்திற் கூடி சொல்லிவிட்டார்கள்.

●

யாழ்ப்பாணப் பொதுவுடைமை நகர பிதாக்கள் போலிச் சுதந்திரத்தைப் போற்றக்கூடாது என்று பேசிவிட்டு, கொண்டாட்டத்தீர்மானத்தை ஏகமனதாய் ஏற்றார்களாம்! யானைக்கு இரண்டு பற்கள் உண்டு. ஒன்று உபயோகத்துக்கு மற்றது வேறு ஒரு பயனுக்கு என்று சொல்லி 'இந்திய தேசிய மாநாட்டுத் தலைவர் திரு. தேபர் பொதுவுடைமையினருக்கு உவமை உரைத்ததை இவ்விடத்தில் ஒப்பு நோக்குதல் நன்று.

# அணிந்துரை அரங்கம்

## தமிழர் சால்பு

— சு. வித்தியானந்தன்

தாய்மொழியிற் கல்வி பயிற்றுங்காலம் கண்மித்துவிட்ட அம்மொழியின் செழுமையை ஆன்றோர் தந்த அரும்பெறல் இலக்கிய அமைப்பிலிருந்து ஆய்ந்து தொகுத்துரைத்தல் இன்றியமையாது வேண்டப்படும் இவ்வேளை 'தமிழர் சால்பு' எனப் பெயரிய நூல் வெளிவருதல் சாலப்பொருத்தமாகின்றது.

ஆராய்ச்சியாளர்களுக்கு ஆழ்கடல்போலப் பரந்துகிடக்கும சங்கநூற் பரப்பிலிருந்து பல கலைஞர்கள் அரிதிற் பெற்ற நுண்பொருள விளக்க முன்னைநூல்கள் வாயிலாகக் கலாநிதி வித்தியானந்தன் அவர்கள் தமிழர் சால்பு இது என மதிநுட்பமும் பொது அறிவும் கொண்டு ஆராய்ந்து கண்டதே இவ்வெளியீடாகும்.

ஒரு பொருளைப் பல்வேறு நூல்களிடைக் கண்டு அதன் விளக்கத்தைச் செஞ்சொல்லிற் றொகுத்து அமைத்துக் கலைச்செல்வத்தைப் பெருக்குதலே நூலியற்றுவோரின் இயல்பாய் இருக்கவேண்டியதாம். அவ்வழி நல்ல நடையிற் சொல்வளச்சுவை தோன்றப் பதினொன்கு இயல்களில் அமைந்துள்ளது 'தமிழர் சால்பு'

சங்ககால வரையறையைப் பற்றி இங்கு ஆராயாது விடுத்தல் நன்று. அந்த ஆராய்ச்சிக்கு ஒருதலை முடிபு இன்னமும் எய்தப்படாமையின்.

இறைவழிபாடு, அரசு, அமைச்சு, போர், வணிகம, மக்கள் வாழ்க்கைமுறை, நாட்டு வழமை, மடவார் மரபு, கல்வியும கலைகளும என்று ஒவ்வொரு வகையிலும் தமிழர் சால்பை விளக்கி நிற்கும மேற்கோட்டுகள சங்கநூல்களில் அங்கும் இங்கும உள்ளனவற்றை ஒருங்கே ஒழுங்குவைப்பில அமைத்து அவற்றால் அறியப்படுவன இவையென இந்நூல் நன்கு தொகுத்துரைக்கின்றது. இது ஆசிரியரின் புலமைப் பொலிவைப் புலப்படுத்துகின்றது.

கல்வி பயின்று வருவோரும் பயிற்றுவோரும் ஒரே நூலிற் பல்வேறு எடுத்துக்காட்டுகளையும் சான்றுகளையும் பொருத்தக் குறிப்புக்களையும அவற்றால் ஒருபொருளை அறியக்கூடிய தொகுப்புரையையும் இலகுவாகப் பெறுதற்கு இவ்வெளியீடு பெருகவி புரிகின்றது, இலக்கிய தென்றல் என்ற நூலில் அரும்பொருள்களை எமக்களித்த இவ்வாசிரியரின் அனுபவம் இந்நூலில் கனிபெரும நன்மை பயப்பதோடு மேன்மேலும் பெரும்பயன் விளைக்கும் நூல்களெழுதற்குமுதவாகுமென்று நம்புகின்றோம்.

—

## சட்ட விரோதச் செயல் தேசபக்தி ஆகுமா?

———

அம்பலாந்தோட்டையைச் சேர்ந்த ருகுணு இளைஞர் இயக்கக் கூட்டத்திலே பேசும் போது இந்தியர் ஒருவரைத் தாக்கிய பாடிகாவலர் ஒருவர் அக் குற்றத்துக்காகச் சிறைக்கனுப்பப்பட்டு பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார் என்று எடுத்துக் காட்டி இதுவே தேசபக்திக்கு அவருக்குக் கிடைத்த பரிசாகும் என்று அரசாங்கத்தைக் கண்டித்தாராம் ஸ்ரீ ஆர். ஜி. சேனநாயக.

—0—

### வீட்டு விலைக்கம் நீக்கவழி

—

யாழ்ப்பாணத் திருள்ள வீட்டு விலக்க நிலைமையைப் பற்றி ஆலோசிப்பதற்கு வடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ ஸ்ரீகாந்தா அவர்களின் முயற்சியால் கச்சேரி வளவில் கைத்தொழில் வீடமைப்பு அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. மண்சுவர்களையுடைய மாதிரி வீடுகட்டுதற்கு அத்துறையில் திறமை வாய்ந்தவர்களைக் கொழும்பிலிருந்து உடனே அனுப்புவதாக சேர். கந்தையா வைத்தியநாதன் அக்கூட்டத்திற் கூறினராம். வீடுகட்டுதற்குக் கடனெடுப்பதில் மக்கள் படும் வருத்தங்கள் அவருக்கு எடுத்துக் காட்டப்பட்டன.

—

# ஈழநாட்டுக்கு எழில்அளிக்கும்சைவஆலயங்கள்

—————:o:—————

## வடபால் அமைந்துள்ள வரலாறு

—————:o:—————

விருது நகரில் சைவசித்தாந்த சமாச 49-ம் ஆண்டு விழாவில்
திருமதி கண்மணி ஸ்ரீ ஸ்கந்தராசா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு

“அம்மையே அப்பா” என்று எல்லோரும் ஒரே உரிமையோடு கூவும் தகுதியுடையராய் சைவமக்களாகிய நாம் இங்கு ஒருங்கு திரண்டு அவர்களுடைய உரிமைப் பாகங்கொண்டு நாம் வாழும் தென்னாடு ஈழநாடு ஆகிய இருநாட்டுப் பிள்ளைகளாய் சுவர்ணபூமி என்றழைக்கப்படும் இலங்கைத் தீவில் அறுவகைச் சமயத்துக்கும் ஆதாரமாகிய சிவகடாக்ஷம் ஆனது விக்நேஸ்வர மூர்த்தமாகவோ, சிவம், சக்தி, வடிவாகவோ, கலியுகவரதனாகிய சுப்ரமண்ய வடிவாகவோ, அவ்வத் திருவடிவங்களோடு, கோயில்கொண்டருளி, அடியார்க்கருள் புரியும் க்ஷேத்திரங்களின் பெருமையில் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

பெரியோர்களே, நான் இப்போ கூறிவருவது எவ்வாறெனில் தமிழருடைய தாயகமும் இராசதானியுமாயிருந்த யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கையை வலம்வருவது போன்ற குறிப்புடன் அங்குள்ள சைவாலயங்களைக் கூறுகின்றேன். “அரசனெவ்வழி குடியுமவ்வழி” என்றபடி முருகனும், தேவியென்று நாம் அமைக்கும் பராசக்தியுந்தான் அன்பர்களுக்கு அவ்வப்போது அருள் புரியும் ஆற்றல் கூடியவர்களாய் மக்கள் கூறுகிறார்கள். அதிலும் முருகனே இன்னும் விசேஷ தீவிரமானவன். அதனாலே இலங்கைத் தமிழர் வாழும் எவ்விடத்திலும் தவறாது விநாயகர் ஆலயங்களும் முருகன் கோயில்களும் அம்மன் கோயில்களும் அதிகமாயிருக்கின்றன. சிவன் கோயில்கள் மிகவும் குறைவு. தமிழர் வாழும் வடமாகாணம் கீழ்மாகாணம் ஆகிய இடங்களிலே தமிழ் அரசர்களாலும் அத்தேச வாசிகளாகிய தமிழர்களாலுமே கோயில்கள் அமைக்கப்பட்டன. ஆனால் இலங்கைச் சகோதரர்களாகிய சிங்களவர் வாழும் இடங்கள் மலைநாடு கொண்ட பகுதியாகும். அங்கே தேயிலை இறப்பர் முதலிய செடிகளை உண்டாக்கும் காரணமாய் வந்த தென்னிந்தியச் சகோதரர்களும் அங்கு வியாபார நோக்கமாய் வந்த இந்தியச் செட்டிமார்களாலுமே சிங்கள நாட்டிலுள்ள சைவாலயங்கள் அமைக்கப்பட்டு மிகவும் விசேஷ முறையாய் பராமரிக்கப்பட்டு வந்தன. தற்போது இந்தியச் சகோதரர் விசேஷமாய் செட்டிமார் ஈழநாட்டில் குறைந்து வருவதால் ஆங்காங்குள்ள பூசை முதலியன குன்றிக்கொண்டே வருவது மனதுக்கு மிகுந்த வருத்தமாயிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தமிழரசு நெடுங்காலமாயிருந்தது. நல்லூரே அதற்கு இராசதானி. கந்தசுவாமி கோயிலே இவ்வூரில் பிரதான ஆலயமாக அன்றும் இன்றும் விளங்கி நிற்கின்றது. இதைச் சுற்றிச் சட்டநாதர் கோயில், பிள்ளையார் கோயில், கைலாயநாதர் கோயில், வீரமாகாளி அம்மன் கோயில் ஆகியன நான்கு புறங்களிலும் கட்டப்பெற்று தவறாத பூசைகளுடன் இன்றும் விளங்கி வருகின்றன. வண்ணார்பண்ணை யென்னும் இடத்தில் வயித்திலிங்கச்செட்டியார் ஒரு சிவன்கோயில் அமைத்து அதற்குப் போதிய விளை நிலங்களையும் மானியமாக வழங்கியிருக்கிறார்.

இலங்கையின் வடதுறைமுகமாக காங்கேசன்துறை விளங்குகின்றது. இதற்கண்மையில் நகுலம் என்றழைக்கப்படும் கீரி முகமுடைய ஓர் முனிவர் தீர்த்தமாடி தன் கீரிமுகத்தை நீக்கப் பெற்ற அவ்வூற்றிற்கு அண்மையிலுள்ள மலையிலேயே தங்கியிருந்தார் என்னும் காரணமாய கீரிமலை என்று இவ்விடத்தை அழைப்பர். பின்னொரு காலத்திலே மாருதப்புரவல்லியென்னும் பெயர்கொண்ட ஓர் தென்னிந்திய அரசகுமாரி இந்நீரூற்றில் தீர்த்தமாடி தனது குதிரை முகம் மாறப்பெற்ற ஞாபகமாக மாவிட்டபுரம் என்று அவ்விடத்திற்குப் பெயரிட்டு அங்கு ஒரு கந்தசுவாமி கோயிலுங் கட்டி நிலைநிறுத்தினள். அக்கோவில் மிகவும் உயர்ந்த கோபுரத்துடன் காட்சியளிக்கின்றது.

யாழ்ப்பாணத்தை யாண்ட அரசருள் தொண்டமான் என்பவனும் ஒருவனாவன். அவ்வரசன் வெட்டிய கால்வாயொன்று தற்காலமும் ஆறுபோல அமைந்திருக்கிறது. அதற்கு அவனது ஞாபகமாகவே தொண்டமானாறு என்று பெயரிட்டனர். இவ்வாற்றோரத்தை நோக்கும்போது அது கதிர்காமமுருகன் வீற்றிருக்கும் கதிர்காமத்திலுள்ள மாணிக்க கங்கைக்கு ஒப்பாகும். ஆறுகளையும் நீடி அமரும் ஆறுமுகன் சில நூறு வருஷங்களுக்குமுன் மருதர் கதிர்காமர் என்னும் பெயருடைய ஒரு அன்பரை பலாற்காரப்படுத்தி அவர் முன்னிலையில் தானே தோன்றி கதிர்காமம் கூட்டிச்சென்று ஒரு வேலாயுதத்தை அவர் கையிற் கொடுத்து கதிர்காமத்திலே கப்புகனார் என்னும் வேடப்பூசாரி தன்னை எப்படிப் பூசிக்கிறாரோ அப்படியே பூசித்துவா என்று அநுக்கிரகஞ் செய்து மறைந்தனர். அன்பரும் அப்படியே செல்வச்சந்நிதி யென்ற திருநாமத்துடன் இத்தொண்டைமானாற்றோரத்தில் கோயிலமைத்து எம்பெருமான் என்னும் வேலை எழுந்தருளப் பண்ணி பூசித்துத் தமபின் தன் சந்ததியாரே பூசித்து வரக்கட்டளையிட்டனர். இச்சேத்திரம் கதிர்காமம்போல அன்பர்களுடைய துன்பம் துடைத்து இன்பமளிக்கும் இணையற்ற ஸ்தலம் தீராத நோய்களெல்லாவற்றையும் இத்தலத்தில் வீற்றிருந்து தீர்த்தருளுகின்றார். அங்கே நடக்கும் காரியங்களை ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள அன்பர்களுக்கும் தெரிவித்து தனக்கு வேண்டிய பொருள்களையும் அவர்கள் மூலம் பெற்றுக் கொள்ளுவார். இங்கே சாதி நீத பேதமில்லாமல் தெரிசனம் கிடைக்கும். இலங்கை வாழ் ஹரிசன மக்கள் கதிர்காமம் செல்வச்சந்நிதி என்ற க்ஷேத்திரங்களுக்குச் செல்லாவிடின் சைவ சமயம் என்ற ஞாபகமே அற்று விடுவார்கள். முருகனும் இவர்களுக்கே அநேக அற்புதங்களைச் செய்வது கண்கூடு. செல்வச்சந்நிதியிலே வேண்டுகின்ற அடியாரிற் சிலரைக் கதிர்காமம் வாவென்றும் கதிர்காமத்திலேயுள்ள அடியாரிற் சிலரைச் செல்வச்சந்நிதிக்கு வாவென்றும் அழைத்து அவரவர்க்கு அருள் புரிகிறார்.

யாழ்ப்பாணத்து வடபகுதியைச் சேர்ந்த வல்வெட்டித்துறை என்னுமூரில் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னே மலையாள தேசத்திலிருந்து கொண்டுவரப்பெற்று கோயில் கொண்டருளிய முத்துமாரியம்மன் கோயில் ஒன்றுள்ளது. ஓர் ஹரிசன பக்தரின் காட்சியிற் தோற்றிக் கொண்டருளியவைத்தீசுவரன் கோயிலும் ஒன்று உள்ளது. இக்கோயில்களிரண்டும் இலங்கையிலுள்ள பல பாகத்துக் கோயில்களிலும் பார்க்க விசேஷ சிற்ப முறைகளும் கிரமமான பூசை முறைகளுமுடையன. ஒரே குடும்பத்தாராலேயே பராபரிக்கப்பட்டு வருவது இதன் பிரதான காரணமாகும்.

இக்கோயில்களுக்கப்பால் கந்தர்வனம் என்ற ஓரிடமுண்டு. அங்கே முருகன் கோவிலுண்டு. இதுவும் அநேக வருஷங்களுக்கு முன்னுள்ளதாகவே கூறப்படுகின்றது.

### தேகவியோகம்

மாவிட்டபுரம் கிராம விதானை திரு. இ. துரைசுவாமி அவர்களின் பிரிய பத்தினியும், இளைப்பாறுகின்ற சிங்கப்பூர் உத்தியோகஸ்தர் திரு. அ. சங்கரப்பிள்ளை அவர்களின் மகளுமாகிய ஸ்ரீமதி இராசயோகலட்சுமி அம்மாள் தமது பிராணநாயகனும் புத்திரர் செல்வன் குகநேசன் செல்வன் சிவநேசனும் ஆழ்ந்த துயரத்தில் அமிழ்ந்தி நிற்க அகாலமாக தமது 28ம் வயதில் 22-1-55 சனிக்கிழமை இவ்வுலக வாழ்வை நீத்தார். அடுத்த நாள் மாலை கீரிமலை செம்பொன் வாய்க்கால் மயானத்தில் இவருடைய ஈமக் கிரியைகள் நடைபெற்றன.

சகோதரர், நிருவாளர்கள்: தனபாலசிங்கம், குருகுலசிங்கம், கனகசிங்கம், சகோதரிகள், ஸ்ரீமதிகள் கனகநாயகம், அன்னலட்சுமி, அப்புத்துரை பாக்கியலட்சுமி, இராதுரை பரிமளலட்சுமி, சங்கரப்பிள்ளை தனலட்சுமி, சங்கரப்பிள்ளை பரிபூரண லட்சுமி ஆகியோரும் பல சுற்றமித்திரரும் இவரது பிரிவால் வருந்துகின்றனர்.

அரனருளால் அம்மையார் ஆன்மசாந்தியடைக.

[இவருடைய ஈமக்கிரியை பின்போது சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக வரித்தனுப்பிய ரூபா ஐந்து பெற்றோம். அதிபர்.]

கச்சியப்பர் கவிநயம்

# புலவர் கூறும் அவையடக்கம்

—————o—————

ஸ்ரீ வ. குகசர்மா, வரைவது

பண்டைய பெருங்காப்பியங்களிலே கடவுள் வாழ்த்திற்குப் பின் அவையடக்கம் கூறுதல் மரபாகும். அவையடக்கம் பெரியோர்க்குக் கூறும் அடக்கமான உரையாகும். நூல் செய்வோர் அவற்றைப் பெரியோர் குழுமிய அவையின் முன் அரங்கேற்றுதல்வழக்கம். அவ்வாறு அரங்கேற்றும்பொழுது பெரியோரைப் பணிந்து தாம் நூல் செயப் புகுந்த காரணம் முதலியவற்றைக் கூறுவர்.

இது நூல் செய்யும் புலவர்களது அடக்கத்தைக் குறிக்கும். பெரியோர்கள் என்பது கற்றவர்களும், அதன் வழி ஒழுகி ஆமைகள் உறுப்புகளை ஓட்டினுள் அடக்கிக்கொள்ளும் தன்மைபோல ஐந்துபுலன்களையும் அடக்கித் தம் வசப்படுத்தும் பெருமை உடையவர்கள். “அறிய கத்தை வெறுப்புதற் சேரினென், சிறிய சொற்பொருட் செம்மை பயக்குமால்” என்ற செய்யுளடிகள் அவையோரின் தன்மையை ஒருவாறு எடுத்துக்காட்டுகின்றன.

அவையடக்கம் என்னும் பகுதியில்புலவர்கள் தங்கள் சொல் வன்மையினாலே அவையோரை மகிழ்விப்பதுடன் தங்கள் தாழ்மையான வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வார்கள். தாங்கள் நூல் செய்யப் புகுந்தகாரணத்தையும் தெளிவாகக் கூறுவர். கம்பர் இராமாயணம் இயற்றியகாரணம் கலைமகனாகிய இராமனிடத்தில் கொண்ட நீங்கா அன்பு, அவரின் புகழைப் பாடவேண்டுமென்ற ஆசை. “ஆசைபற்றி அறையலுற்றேன், மாசில் கொற்றத்து ராமன் கதையரோ” என்று கம்பரே கூறுகிறார். கச்சியப்பர் கந்தபுராணம் பாடியதற்கும் இதுதான் காரணம். இதுவன்றி வேறோர் காரணமும் உண்டு. “யான் பெற்றவின்பம் பெறுக இவ்வையகம்” என்ற எண்ணம் கொண்டும் உலகமுய்யும்படியாக இவ் இருபெரியார்களும் இக்காவியங்களை ஆக்கியிருத்தல் கூடும்.

பெரியோர் குழுமிய அவையின்முன்னே தன்னை ஒரு சிறு குழந்தையாகவே கச்சியப்பர் கருதுகிறார். இந்தக் குழந்தையோ உலகத்தில் உள்ள குழந்தைகளைப்போலப்பிடிவாதத்தில் பேர் போனது. எல்லாரும் கவி பாடுகிறார்கள். அவற்றை ஏட்டில் எழுதுகிறார்கள். குழந்தை அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அதற்கும் எழுத வேண்டுமென ஆசையுண்டாகின்றது. ஒரு குழந்தை முதன்முதலாக அரிச்சுவடியெழுத்துக்களை மண்ணில் அல்லவா எழுதிப் பழக வேண்டும்? அவ்வாறு இந்தக் குழந்தை எழுதிப் பழகக்கூடவில்லை ஏட்டையும் எழுத்தாணியையும் எடுத்து வைத்துக்கொண்டது. “நான் முறையாக எழுதுவேன்” என எழுதவும் தொடங்கி விட்டதாம். அவ்வாறு இருக்கிறதுதான் இந்தக் கந்தபுராணம் என்னும் பெருங் காப்பியத்தைப் பாடத் தொடங்குதல் என்கிறார்.

“இறைநில மெழுதுமுன் இளைய பாலகன்
முறை வரைவேனென முயல்வ தொக்குமால்”

என்று தொடங்கும் அடிகள் அவரது மன நிலையை எடுத்துக் காட்டுகின்றது.

“அறையு மாடரங்கும் படப் பிள்ளைகள்
தரையிற் கீறிடிற் றச்சரும் காய்வரோ”

எனவரும் இராமாயண அடிகளும் ஒப்பிட்டு நோக்கற்பாலன.

தேவர்கள் யாவரும் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானை வணங்கப்போகிறார்கள். போகும்போது பிரகாசம் பொருந்திய முடிகளைத் தலையில் அணிந்துகொண்டு செல்கிறார்கள். அக்கினியே உருவமாகவுடைய சிவபெருமானுக்கு முன்னேவந்துவிட்டார்கள்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## மொழிபற்றி கலாநிதி பெரேருவின் மதமொழி

யாழ்ப்பாணக் கல்லூரியின் கொழும்புப் பழைய மாணவர் சங்கக் கூட்டத்திலே பேசும்போது இலங்கை மாணவர் யாவரும் தமிழையும் சிங்களத்தையும் கட்டாயபாடமாகக் கற்க வேண்டுமென்றும், தமிழ் சிங்கள மாணவருக்கிடையிலுள்ள பிளவுகளை நீக்கி ஒன்றுபடுத்தி யாவரும் இந்நாட்டு மக்கள் என்ற நோக்கமுடையராதற்கு கல்வி அறிஞர்களும் பெற்றோரும் முயற்சிக்க வேண்டுமென்றும் கூறினார் கலாநிதி என். எம். பெரேரா.

## சைவமங்கையர் கழக வெள்ளி விழா

கொழும்பு நகரில் தமிழரிடையே புதிய மறுமலர்ச்சி ஏற்படுத்தியதும், தமிழ் மொழி நறுமணம்பெற்று நிலவச் செய்ததும் சைவமங்கையர் கழகந்தான். இந்தத் தமிழ்க் கலைமண்டபத்தை ஏற்படுத்தப் பல பெண்கள் செய்த தொண்டு போற்றத்தக்கதுமன்றி தமிழராகிய நாமெல்லோரும் பெருமையடையக் கூடியதுமாகும் என்று திரு. சு. நடேசன் அவர்கள் சைவமங்கையர்கழக வெள்ளிவிழாவிலே தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் தமிழ் ஒரு காலங்கண்ட பாஷை. தமிழர் ஒரு காலங்கண்ட வகுப்பினர். எத்தனையோ மொழிகள் தோன்றுவதற்கு முன்னரே தமிழ் மொழி தோன்றியது. அந்த மொழிகளிற் பல இன்று அழிந்து ஒழிந்த போதிலும் தமிழ் மொழி மேன்மேலும் வளர்ந்து வருகிறது. அரசர், புலவர், நாவலர், பாவலர் ஆகியோர் போற்றிய தமிழ்மொழியில் இப்பொழுதும் ஒரு அழியாததன்மை இருந்து வருகிறது. தமிழ் மொழியிலிருந்து வரும் எத்தனையோ சார்புகளில் முக்கியமானது இம்மொழியிலுள்ள தெய்வபக்தி நிறைந்த சார்பாகும். அப்படிப்பட்ட தெய்வமொழியாகிய தமிழ் மொழிக்கோ தமிழருக்கோ எக்காலத்திலும் யாதாலும் அழிவு ஏற்படாது என்றும், "ஆங்கில ஆட்சியில் தங்களின் பண்டைய இசை, கலை, நாடகத்தை அழியாமல் காப்பாற்றி வந்தவர்கள் தமிழர்கள் தான். அக்கலைதான் என்றும் அழியாமல் நிற்கும். மற்றவை தோன்றி மறையும். உலகத்தில் வாழ்க்கைக்கு இன்பத்தை அளிக்கும் சக்தி கலையிலதான் இருக்கிறது" என்றும் திரு. நடேசன் கூறினர்.

## தமிழ் மக்களுக்குச் சிங்களப் பத்திரம்

தபாற் கந்தோர் சேமிப்புப் பகுதியின் பத்திரங்கள் முன்பு மும்மொழிகளிலும் அச்சிட்டு வழங்கப்பட்டன. அவற்றை எவரும் கையாளக்கூடியதாயிருந்தது. தாய் மொழிகளுக்குச் சம உரிமை வழங்குவதாகக் கூறப்படும் இக் காலத்தில் ஒற்றன் தபாற் கந்தோரில் சிங்களத்தில் மாத்திரம் அச்சிட்ட பத்திரங்களையே சிங்களம் படியாத பெருந் தொகைத் தமிழ் மக்களுக்குக் கொடுக்கின்றனராம்.

## இந்திய குடியரசு தினக் கொண்டாட்டம்

சென்ற வியாழக்கிழமை வழிபாட்டிடங்களி லெல்லாம் வழிபாட்டுடன் ஆலய மணிகள் சப்திக்க இந்திய நாடெங்கும் பேரார்வத்துடன் குடியரசு தினம் கொண்டாடப்பட்டது.

குடியரசு தினத்துக்குச் சென்றிருந்த பாகிஸ்தான் தலைமைத் தேசாதிபதி ஸ்ரீ குலாம் மூகமது அவர்கள் வரவேற்புக் கூட்டம் ஒன்றிலே பேசும்போது மனக்கசப்புக் கிடமான பழையவை கழிய இரு நாடுகளுக்குமிடையில் நம்பிக்கை நிலைக்கக்கூடிய புதிய முறைகளைக் கையாளுவோம் என்று உறுதிமொழி கூறினர்.

அமெரிக்க சனாதிபதி முதலிய பல அரசாங்கத் தலைவர்கள் இந்தியாவின் முன்னேற்றத்தைக் குறித்துப் பெரும் பாராட்டுரைகள் அனுப்பியிருக்கின்றனர்.

## கூட்டுறவு குன்றுதற்குக் காரணம்

உற்றார் உறவினரை அங்கத்தவராகக் கொண்டு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதே யாழ்ப்பாணத்திற் கூட்டுறவு இயக்கம் குன்றுதற்குக் காரணம் என்று கூட்டுறவு விசாரணைச் சபையாருக்குக் கூறினாராம் புகையிலைக் கூட்டுறவுச் சங்கத் தனிகாரி திரு. ஓ. பொன்னம்பலம்.

## முஸ்லிம்களுக்குத் தமிழ் தாய் மொழி அல்லவாம்

பாணந்துறையைச் சேர்ந்த அட்டலுகம முஸ்லிம் வாலிபர் சங்கப் பொதுக் கூட்டமொன்றிலே பேசும்போது சுயபாஷைப் போராட்டம் முடிந்துவிட்டதால் முஸ்லிம் குழந்தைகளின் எதிர்கால நலனை முன்னிட்டு, நான் அவர்களுக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அவர்கள் சிங்களத்தைத் தங்கள் பாஷையாகத் தெரிந்தெடுத்துக் கற்பதில் ஊக்கங் கொள்ளவேண்டும். சிங்களமோ அல்லது தமிழோ முஸ்களின் தேசிய மொழி அல்ல. ஒன்றைவிட மற்றது அவர்களுக்கு நெருங்கியதாயிருக்கமுடியாதாகையால் சிங்களத்தைத் தங்கள் பாஷையாக முஸ்லிம்கள் படிப்பது இலாபமானதாயிருக்கும்; சிங்களவர்களுக்கிடையே வாழ்ந்துவரும் அவர்கள் சிங்களம் படிப்பது அத்தியாவசியமென்றுகூட நான் சொல்லுவேன் என்று கூறினாராம் நிதிமந்திரி ஸ்ரீ எம். டி. எச். ஜயவார்தன.




## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

**இவ்வாரப் பலன்கள், 6—2—55 — 12—2—55**

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் சித்திபெறுதற்கு நீர் மிக முயன்றுழைக்கவேண்டும், உம்முடைய நண்பர் அதிக உதவியாயிருப்பர். வார இறுதியில் மாதாவழி இனத்தவர்களால் சில தொந்தரவுகள் அல்லது மாதாவுக்குச் சுகவீனத்துக்கிடமுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

உம்முடைய முயற்சியில் மற்றவர்களை நம்பியிராது நீரே ஆரம்பத்தைச் செய்தால் நீர் சித்தி எய்தக்கூடும். நண்பர் வாக்குறுதிகளை நிறைவேற்ற மாட்டார்கள். வார இறுதியில் கமத்தொழில் மூலம் இலாபத்துக்கிடமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4, திருவாதிரை புனர்பூசம் 1,2,3.**

பணத்துறையில் நல்ல வாரம் ஆனால் தேகசுகம் அதிகம் நல்லாயிராது. குடும்ப சமாதானமும் கொஞ்சமுமிருக்க மாட்டாது. வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

வாகனங்கள் மூலம் இலாபங்களுக்கிடமுண்டு. உம்மோடு போட்டியிடுவோரை நீர் வெல்லக் கூடியதாயிருக்கும். வார நடுவில கந்தோரில் சில தொந்தரவுகளுக்கிடமுண்டு, செலவதிகரிக்கும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

தளம்பமான வாரம். வரவுசெலவுகளைச் சமாளிக்கமாட்டாது வருந்துவீர். நண்பர் இனத்தவர்களிலும் அன்னியர் அதிக உதவியாயிருப்பர். வார இறுதியில எதிரிகள் அழிவுக்கிடமுண்டு.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

ஞாயிறு திங்களும் செவ்வாய் காலையும் கவனமாயக் கழிக்க வேண்டும். பின்பு திருத்தம் நிச்சயம். உத்தியோகத் துறையில் நல்ல வாரம். ஆனால் உமது மனச் சமாதானமிருக்கமாட்டாது. தேக சுகமும் தாக்குப்படும்.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

முதலிரு நாட்களும் புது முயற்சிகளுக்கு நல்லனவாயிருக்கும், நண்பாலும் இலாபங்களுக்கும் உதவிகளுக்குமிடமுண்டு. செவ்வாயும் புதனும் உம்மை அதிகம் நிலைகுலைக்கும். வாரமிறுதி நன்றாயிருக்கும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

முன் அரை வாரம் புது முயற்சிகளுக்கு நல்லாயிருக்கும். உமமுடைய திறமைகள் கவனிக்கப்படும வியாழனும வெள்ளியும உம்மைக் கொஞ்சம் நிலைகுலைக்கும். கடைசி நாள் திரும்பவும நல்லதாகும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.**

இந்தவாரம் இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர் உதவி செய்வர். தேடிவர கூடும். நீர் கூடிய பொறுப்புகள் ஏற்கவேண்டி வரக்கூடும் வார இறுதியில் இனத்தவர்களுடன் சில சண்டைகளுக்குமிடமுண்டு.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம அவிட்டம் 1, 2ம பாதம்.**

பொதுவாக நல்லவாரம், சமூக சித்தியும் புகழும் நிச்சயம். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். ஆனல் கொஞ்சக் காலத்துக்கு தேகசுகம் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

உமது செலவதிகரிக்கும். இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்குமிடமுண்டு. சுகவீனங்களுக்கிடமுண்டு. உம்முடைய முயற்சிகளில் நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

பெண் இனத்தவர்கள் அல்லது நண்பர் இந்தவாரம் உமக்குக் கொஞ்சம் கோபம் மூட்டக்கூடும். ஆனல அது ஒரு சிறிய பரபரப்பாய் முடியும் உத்தியோகத் துறையில் நல்ல வாரம், பகைவாழிவுக்குமிடமுண்டு.


## யாழ்ப்பாணம ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**

எச்சமிதி சர்சரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எழுத்துமூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
நிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

## யானைப்பல் போன்றதாம்

### பொதுவுடைமையினரின் போக்கு

வெளியிலே தெரியும் பல்லும் தெரியாத பல்லுமாக இருவகைப் பற்கள் யானைகளுக்கிருப்பது போன்று பொதுவுடைமையினர் திட்டங்களிலும் இரண்டுவகை உண்டு என்று மருவிப் பட்டணத்திலே பேசும்போது கூறினராம் இந்திய தேசியமகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ யூ என். தேபார்.

### இந்து ஆலயச்சட்டம்

இந்த ஆலயச்சட்ட திட்டத்தைப்பற்றி உள்நாட்டு மந்திரி ஸ்ரீ ஏ. றத்நாயக பாராளுமன்றத்தில் பேசும்போது ஆலய வழிபாடு செய்வோரால பெரும்பான்மையும் தெரிவு செய்யப் பெற்ற ஒரு சபையாரும் அராங்கத்தால் நியமிக்கப்படும் ஒருகாரியாதிகாரியும் இச்சட்டத்தை நடைமுறையிற்கொண்டுவருவர். ஆலய நடைமுறை ஒழுங்குகளில் அல்லது நீதிமன்றம் அமைத்ததிட்டங்களில் அல்லது சைவசமய வழக்கங்களில கைவைக்க குறித்த சபையார் அல்லது காரியாதிகாரி அதிகாரம் கொடுக்கப் படவில்லை என்றும் கூறினர்.

## கேள்வி விளம்பரம்

1955ம் ஆண்டு மாசி மீ 9ம் உ காலை 10 மணி வரையும் கேரிலாவது தபால் மூலமாவது சமட்டானை ரோட்டு வேலையின் கேள்விப்பத்திரம் ஏற்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1955ம் ஆ மாசி மீ 7ம் உ காலை 11 மணி வரையும் பிணைப் பணம் ரூபா ஐம்பது கட்டும் ஒப்பந்தக்காரர்களுக்கே வழங்கப்படும்.

இ. நா. சிவகுருநாதன்
உடுப்பிட்டிகிராமச்சங்கத்தலைவர்
M. 30 4—2—55.

## சண்டேசுரநாயனார் குருபூசை

காலம் : ஜய ௵ உ௮ ௳ (10-2-55) வியாழக்கிழமை
இடம் : சைவபரிபாலனசபை நாவலர் மண்டபம்.

### நிகழ்ச்சிகள்:

இரவு $6\frac{1}{2}$ — $8\frac{1}{2}$ கடவுளாராதனை, சண்டேசுரநாயனார் பூசை, தமிழ்மறையோதல், திரு V. சப்பையாவும் அவரது கோஷ்டியாரும்.

$7\frac{1}{2}$ — $7\frac{1}{2}$ "சண்டேசுரநாயனார்" என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம்

பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுர ஐயர்.

சைவாபிமானிகள்
சமுகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார சபைக்காரியஸ்தர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
1-2-55.

## அரசாங்க விளம்பரம்

### வவுனியாக் கச்சேரி

N 300 - 1-3-55 தொடக்கம் 30-9-55 வரை வவுனியாப் பகுதியைச் சேர்ந்த வலையன்மடம், அளம்பில் என்னும் கிராமங்களின் கள்ளுத் தவறணைகள் முல்லைத்தீவு அரசாங்க உதவி அதிபரின் கமானவீட்டில் 23-2 55 காலை 10 மணிக்கு விற்கப்படும்.

N. 302 - 1 3 55 தொடக்கம் 30-6-55 வரை வவுனியாப் பகுதியைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு என்னும் கிராமத்தின் கள்ளுத்தவறணை முல்லைத்தீவு அரசாங்கஉதவி அதிபரின் கமானவீட்டில 11-2 55 காலை 10 மணிக்கு விற்கப்படும்.

முழுவிபரங்களுக்கு 3 2 55 அரசாங்க கசற் பத்திரிகையின் 1ம் பாகம் 2ம் பிரிவைப் பார்க்க
M. 46 4—2—55.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோடு வெள்ளவத்தை தொறுலேன் 4712 பாலசுந்தரம் விவேகானந்தன் —வழக்காளி.

விரோதமாக
இல. 8933

யாழ்ப்பாணம் இப்பொழுது கோலக்கஞ்சார் லொஜித் தோட்டம் ஆர். சி மன்னவராயன்
எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கமிஷன் கட்டளைப்பிரகாரம் இதன் கீழ்காணப்படும் ஆதனம் 1955ம் ஆ மார்ச்சு மீ 26ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 1166-66ம் இதில் ரூபா 1000க்கு 14-7 1952 தொடக்கம் 9 - 9 - 53 வரையும் ௵ 1க்கு 100க்கு 10 வீதம வட்டியும் அதன பின மொத்தத்தொகைக்கு 9-9-53 தொடக்கம் இறக்குந் திகதிவரையும் ௵ 1 க்கு 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய்க்கோவிற்பற்று மானிப்பாயிறை. காம்பன் வளவு நிலைபா $6\frac{1}{4}$ம கல்வீடும் புதிய தலைவாயிலும் கார்க்கட்டிடமும், மலசலகூடமும் வெளிவீடுகளும் வான் செய்பயிர்களும் இவனு மிதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு பொனனையா பாலரத்தினத்தின ஆதனம், வடக்கு கன்னி வயித்திலிங்கத்தின் ஆதனம் மேற்கு சுப்பிரமணியம் இராசரத்தினத்தின ஆதனம். தெற்கு ரோட்டுதெரு இதடங்கலுமிதைச் சேர்ந்தவைகளும். இக் காணி 263/231 ல் பதியப்பெற்றது சுதுமலை தெற்கு மானிப்பாய்.

பெ. முத்துத்தம்பி,
வெத்திஸ்கமிஸ்னர்.
1955ம் ஆண்டு ஜனவரி மீ 29ம் உ
M 32 4 2 55

## அரசாங்கக் கேள்விப்பத்திரங்கள்

### வனபரிபாலன இலாகா

வவுனியா அரசாங்க மரக்காலையிலிருக்கும் ஏறக்குறைய 500 சிறு பயறி, சிறுபன்னை ஆகிய மரங்களை ஒரு அங்குலப் பலகையாக அறுத்துக் கொடுப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் 1955ம் ஆண்டு மாசி மாதம் 14 ம் திகதி நடுப்பகல் 12 மணி மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். இது சம்பந்தமான ஏனைய விபரங்களை யாழ்ப்பாணம் வட பகுதி வனபரிபாலன இலாகா அதிபரின் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

G. 45 4-2-54.

# புலவர் கூறும் அவையடக்கம்

3-ம் பக்கத்தொடர்ச்சி

வந்து அவர் பாதங்களை வணங்குகின்றார்கள். ஆனால் சிவபெருமானது தேகத்தின் காந்தியினால் தேவர்களது முடியின் ஒளி அற்றுப்போகிறது. அதுபோல சூரியன் காலையில் உதயம செய்தலும்தாரகைகளின் ஒளி அற்றுப்போகிறது. அவை சூரியனுக்கு முன் பிரகாசிக்கமுடியுமா? சபையின் கண்ணேசிறந்த சொற்களாகிய தமிழ்ப் பாஷையை நன்குணர்ந்த புல்வர்களாகிய சூரியர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் முன்னேதான் ஒரு நட்சத்திரம். அதுவும் அந்தச் சூரியனுக்குப் பக்கத்திலே ஒளிவிட விரும்புகிறது.

"கூறுதற் கொண்ணுதல்
வானகத்தெழும் வான்கதிரோன்
புடை
மீனிமைப்பவிரும்பிய போலுமால்"

என்று தனது அடக்கத்தையும் பெரியோரின்பெருமையையும் ஒருங்கே விளங்க வைக்கிறார்.

எதற்கும் விதி விலக்கு உண்டு. புலவருள்ளே பொறுமை நிறைந்த சிலரும் உண்டு. அவர்கள் தாங்கள் தான் யாவும் அறிந்தவர்கள் என்றும், மற்றவர்களுக்கு ஒன்றுமே தெரியாதென்றும் நினைப்பார்கள். மற்றவர்கள் கூறும் செய்யுள்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு குற்றம்கூறுவார்கள். "தமிழில் இலக்கணம் செய்தவரும் சிவபெருமான் கூற கேட்டுத் தமிழைக் கற்றவராகிய அகத்திய முனிவரினது பாட்டிலும் அவர்கள் குற்றம் கூறத் தயங்கமாட்டார்கள். அவ்வாறுள்ளவர்கள் கற்றறிந்த கலைஞரல்ல" என்று கூறுகிறார்.

கந்தபுராணம் பாடியது முருகனைத் துதிப்பதற்காக அந்த முருகப் பெருமானே இவரின் பாடலை ஏற்றுக்கொள்வாரா என்று அவையுள் உள்ள சிலர் மனதில் நினைத்திருக்கக்கூடும். யாரும் இழிவாகக் கருதுவது காட்டில் சிந்தியிருக்கும் இறந்தவர்களின் எலும்புக்கூடு. அந்த எலும்புகளை முருகப்பெருமானின் தந்தையாகிய சிவபெருமான் ஆபரணமாக அணிந்திருக்கிறார். பூரண சந்திரனை விடுத்து தேய்ந்த பிறையையே ஆபரணமாகத் தரித்திருக்கிறார். அன்பினாலே கல்லால் எறிந்த சாக்கிய முனிவருக்கு அருள் செய்தார். மலரால் எய்த மன்மதனை எரித்தார். அன்புதான் பெரிது முருகப்பிரானே "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன் என அருணகிரிநாதரால் புகழப்படுகிறார் எனவேதனதுபாட்டையும் முருகப்பெருமான் ஏற்பார் என நூலாசிரியருக்கு துணிபு பிறக்கிறது.

"சிந்தமென்பு சிரம்பிறை
தாங்கினேன்
மைந்தனுதலின மன்றவன்
முனுமென்
சந்தமில்லுரையுந் தரிப்பானெனக்
கந்தனுக் குலாந்தே
னிக்கதையினை"

## கீரிமலைச் சிவன்கோயில் கொடியேற்றம்

பல ஆண்டுகளாகக் கொடியேற்றப்படாது திருப்பணி வேலை செய்யப்பட்டுவந்த தீர்த்தப் புகழ் வாய்ந்த கீரிமலை நீரூற்றின் அருகாமையிலுள்ளபுராண சரித்திரப் புராதன ஸ்ரீ நகுலேசுவர ஆலயத்தில வருகிற திங்கட்கிழமை கொடியேற்ற வைபவமும் மகா சிவராத்திரியன்று தீர்த்தமும் அதற்கு முதல்நாள் தேர்த் திருவிழாவும் நடைபெறுமென்று அத்தேவஸ்தான அதிபர் பிரமஸ்ரீ கு. நகுலேசுவரக்குருக்கள் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

பல சைவப் பேரறிஞர்களினதும் அகில இந்து சைவ இளைஞர் மாசபையாரினதும் ஆதரவில் திருவிழாக் காலங்களில் சைவப் பிரசங்கங்கள் நடைபெற ஒழுங்குகள் செய்யப் பெற்றிருக்கின்றன.

தென் இந்திய தேவஸ்தான முறைப்படி தீர்த்தக் கரையில் அம்மன் தபசிருக்கும் காட்சியும பிட்சாடனர் விழாவும் விசேட நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன.

## பர்மோசாபற்றி நேரு சேர்ச்சில் வேற்றுமை

பர்மோசாபற்றி நேருவுக்கும் சேர்ச்சிலுக்குமிடையில் பெரும் கருத்து வேற்றுமை இலண்டன்மகாநாட்டில் காணப்பட்டதாம். ஆயினும் மகாநாட்டுக்கு வெளியில் பேச்சுக்கள் பலரிடையே பலவாறு நடக்கின்றன.

### யாழ்ப்பாணத்தில் இந்தியபாராளுமன்றக் குழுவினர்

சரித்திரப்பிரசித்தி வாய்ந்த பல இடங்களைப் பார்த்து வந்த இந்தியபாராளுமன்றக் குழுவினர் யாழ்ப்பாண நகரசபைத் தலைவரால் யாழ்ப்பாண நகரமண்டபத்தில வரவேற்கப்பெற்றனர். அத்தருணம் நகரசபைத்தலைவர் ஸ்ரீ சுல்தான் பேசும்போது இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலுள்ள பல தொடர்புகளைக் குறிப்பிட்டுப் பாராட்டி யாழ்ப்பாண நூல்நிலையத்துக்கு இந்திய அரசாங்கம் கொடுத்த நன்கொடைக்கு நன்றி தெரிவித்தார்.

# மன்னார் சைவ மகாசபை

மன்னார் குமரன் படமாளிகையில் மேற்படி சபையின் கூட்டம் ஸ்ரீமான் கே. ஜயக்கொடி, மன்னார் நீதிபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மகாத்மா காந்தியடிகள் அமரத்துவம் அடைந்த புனிததினமாகையால் அப் பெரியார் உலக மக்களுக்காகச் செய்துள்ள அரும் பெருந் தொண்டுகளைக் குறிக்கும் அடையாளமாகச் சபையார் எழுந்து நின்று இரண்டு நிமிஷ மௌன விரதம் அனுட்டித்த பின்னர் கூட்டம் ஆரம்பித்தது.

இக்கூட்டத்தில் மன்னார் சைவ மகாசபையின் உபதலைவராக ஸ்ரீ எம். கே. முத்துசாமி (எஸ்,எம்.ஆர்.) ஏகமனதாய் தெரியப்பட்டார். பின்பு சைவ சமய அபிவிருத்திக்காகவும் சமயக்கல்வி ஆசாரம் முதலியவற்றுக்காகவும் ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலை ஒன்று வருகின்ற ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் அரசாங்க அனுமதியுடன் மன்னார் அரசினர் கனிஷ்ட பாடசாலையில் ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்வதற்காக திருவாளர்கள் கே. ஜயக்கொடி, எஸ். குமாரசுவாமி, எஸ். கே. முத்துவேலு, எம். இரகுநாதன் ஆகியோர் அமைந்த ஓர் நிர்வாகசபை தெரியப் பெற்றது. மூன்றுவதாக சைவசமய வாசிகசாலை ஒன்று ஸ்தாபிப்பதற்கும், கூட்டங்கள் கூடுவதற்கும் மேற்படி சபைக்குச் சொந்தமான ஓர் கட்டிடம் அமைப்பதற்கு ஸ்ரீமான்கள் எம். கே. முத்துசாமி, எம். ஈ. நடராசா அவர்கள் உட்பட ஒரு உபசபையும் தெரிவு செய்யப்பட்டது.

வருகின்ற 6—2—55 ல் கொழும்பில் நடைபெறவிருக்கும் அகிலஇலங்கைச் சைவமகாநாட்டிற்கு மேற்படி சங்கத்தின் பிரதிநிதிகளாக திருவாளர்கள் எம். கே. முத்துசாமியும், எம். கந்தசாமியும் தெரிவு செய்யப் பெற்றனர்.

# தமிழ் மொழி வளர்ச்சிக்கு வழி

1-ம் பக்கத்தொடர்ச்சி

யை மறந்து, அன்னிய மொழிகளை ஆவலுடன் கற்கின்றனர். இதனைக் கண்டு உள்ளங் கொதித்து குமுறினர் பாரதியார்.

"கம்பனென் றொரு மானிடன்
வாழ்ந்ததும்
சேரன் தம்பிசிலம்பை
யிசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை
கண்டதும்
அன்ன யாவு மறிந்திலர்
பாரதத்
தாங்கிலம் பயில் பள்ளியுட்
போகுவர்
மற்றென்ன கூறி எங்ஙனு
ணர்த்துவேன்
இங்கிவர்க் கென் னுள்ளம்
எரிவதே"

என்றெல்லாம் தமிழ்ப் பாக்களைப்பாடி தமிழ் மக்களிடையே ஒரு புரட்சியை உண்டுபண்ணினர். அதன் பயனாக மீண்டும் தமிழ் மொழி வளம்பெறத் தொடங்கியது. அதனால் ஆங்கிலத்தையோ பிறமொழிகளையோ கற்கக் கூடாது என்பது கட்டாயமல்ல. எத்தனை மொழிகள் கற்க முடியுமோ அத்தனை மொழிகளையும் கற்கலாம். அப்படிக் கற்பதால் பிறநாட்டுக் கலைச் செல்வத்தைத் தமிழ் மொழியில் கொண்டு வரலாம். ஒருவனுடைய தாய்மொழியே அவனுக்கு உயிர். தாய் மொழியை நாம் விரும்பிக் கற்கவேண்டும். ஒவ்வொரு தமிழனும் தமிழைக் கற்கவேண்டும். அதுவே தமிழ் மொழியை வளர்ப்பதற்குச் சிறந்த வழியாகும்.

பண்டைப் பெருமை வாய்ந்த நந்தமிழை வளர்க்குமாற்றில்நானிலமும் போற்ற நற்பணி புரிவோமாக.

## போர்த்துக்கலின் நிராகரிப்பு

இந்திய — கோவா சத்தியாக் கிரகிகளைப் போர்த்துக்கல் அரசாங்கம் நாடு கடத்துமேயானல் இந்தியாவில் பெரும் எதிர்விளைவுகள் உண்டாகுமென்ற இந்திய அரசாங்கம் செய்த எச்சரிக்கையைப் போர்த்துக்கல் அரசாங்கம் நிராகரித்துவிட்டதாம். இந்திய அரசாங்கத்துக்கு இக்காரியத்தில் ஈடுபட உரிமை இல்லையென்பது அவர்களின் கியாயம்.

## இந்திய பாராளுமன்ற அங்கத்தவர்களின் வருகை

கல்லெண்ணத் துறையில் வருகின்ற இந்திய பாராளுமன்ற அங்கத்தவர்கள் இந்த மாசம் 30ந் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்கள். யாழ்ப்பாண நகர சபையார் அவர்களை வரவேற்க ஒழுங்கு செய்கின்றனர்.

## லஞ்சக் குற்றச்சாட்டு

நீர்ப்பாய்ச்சற் பகுதிப் பெரிய உத்தியோகத்தர் ஒருவரின் லஞ்சக் குற்றஞ்சாட்டப்பட்டு இளைப்பாறுகின்ற இரு நீதிபதிகளும் ஒரு சர்வகலாசாலைப் பேராசிரியரும் உறுப்பினராய விசாரணைச் சபையாரால் விசாரிக்கப் படுவாராம். இதில் இடுபட்ட வேறு பல உத்தியோகத்தர் இருப்பதாகவுங் கூறப்படுகின்றது.


சாலாமிஸ்ரி லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப்பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செறிவு, கைகால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப்பொருமல் புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, வெள்ளை, சூலை, சந்துவாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீக்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி வஜ்ரம் பலம் முதலானவை உண்டாகும்

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக் கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்ச் சாணுதலாக ரோகிடும் பல நோய்களும தீர்ந்து தேகத்துக்குப் பலம் உண்டாகும்

ஒரு இருத்தல் விலை ரூபாய் 25-00
அரை ,, ,, 12-50
கால் ,, ,, 6-25.

வி. பி. பி. செலவு பிரத்தியேகம். வி. பி. பி. மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

விலாசம்:
K. ஆறுமுகம்பிள்ளை
இலக்கம்: 3/1 தட்டாதெரு,
கோட்டை முனை,
மட்டக்களப்பு.

[M. 153 29-10]


## ஐக்கிய தேசியக் கட்சியில் சாவகச்சேரிப் பிரதிநிதி

சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. குமாரசாமி தமிழர் மகாகாட்டி விருந்து நீங்கி ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினராய் விட்டனராம்.

## இந்திய தேசிய மகாநாட்டில் தமிழ்ப்பேச்சு

இந்திய தேசிய மகாநாட்டுப் பொருள் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் யாவரும் இந்தியிலும் ஆங்கிலத்திலும பேசினர்களாம். ஆனல் தமிழ் நாட்டுப் பிரதிநிதியான திரு. ஆர். வெங்கடராமன் மாத்திரம் தமிழில் பேசினார். அப்பொழுது கூட்டத்தில் அமைதியின்மை உண்டாயது. தலைவர் அமைதியை நிலவச் செய்தார்.

ஏன் இவ்வாறு பேசினர் என்று கேட்டதற்கு ஆங்கிலந் தெரிந்த வடநாட்டவர் இந்தியில் பேசினர்கள். இந்தி தெரியாத தமிழ் மக்களின் உணர்ச்சி எவ்வாறிருந்திருக்குமென்பதைக் காட்டவே தமிழ் மொழியில் பேசினேன் என்று அவர் விடைகூறினராம்.

# மொழிக் கொலை புரிவதில் முதற்பரிசு யாருக்கு.................?

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கலந்சால்தான் தமிழ் வழரும் எனக் கூறுதலும் வியப்பினும் வியப்பு! இத்தகைய தமிழ் இதழ்களின் இழிந்த நடைப் போக்கு படிப்பவர் உள்ளங்களில் நாளடைவில் வளர்ந்து நல்ல தமிழைக் கெடுத்து விடுகின்றது. ஆகலால் தாய்மொழி வளாச்சியிலும் பாதுகாப்பிலும் கவலை கொண்ட தமிழ்மக்கள் இக்கலப்பு மொழிச் செய்தித் தாள்களை வெறுத்து ஒதுக்குவாராயின், அவற்றின் நடை திருத்தப்படும்; அல்லது அத்தாளகள் அழுகு தொழியும். எனவே தமிழ் ஆக்கத்திற்கோ; அலலது கேட்டிற்கோ பொதுமக்களே பொறுப்பாளிகளாவர். தமிழ்க் கொலை புரிவோருக்குத் தக்க பாடங் கற்பித்தல தமிழ்ப் பொது மக்களின் கடமையாகும்.

### தமிழாசிரியர்கள்

தமிழில் பேசித் தமிழ் கற்பிப்பதையே அலுவலாகக்கொண்டு தமிழால் வாழ்க்கை நடத்தும் தமிழாசிரியர் சிலர், தம்மிடம் கற்கும் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பற்றை ஊட்டுவதில்லை. தமிழில் என்னடா இருக்கிறது எல்லாம் பிறமொழிகளில்தான் இருக்கின்றன என்று கூறுதலையே தாம் பிறவியெடுத்ததின் பயனாகக் கருதுகின்றனர் இவர்கள் தங்களைத் தமிழ் மக்கள் என்று வெட்கமின்றிக் கூறிக்கொளகின்றனர். இவர்கள் தமிழுக்கு மட்டும் பகைவரல்லர்; தமிழினத்திற்கே பகைவராவர். இவர்கள் அறிவுபெறும் நாள் எப்பொழுது வரும்?

### ஆட்சி மன்றங்கள்

நகரவைகளிலும் ஊராட்சி மன்றங்களிலும் இருப்பவர் அனைவரும் தமிழரே. அவர்கள் தெருக்களுக்குப் பெயரிடும்பொழுது 'இளங்கோ தெரு, 'வள்ளுவர் தெரு' 'கம்பர்தெரு' 'சேக்கிழார் தெரு' 'ஔவையார் தெரு' எனத் தமிழ்ப்புலவர் பெயர்களை வைத்து வழங்கலாம். ஆனல் இந்நினைவு பெரும்பாலோருககு இல்லை. தமிழறிவும் தமிழுணர்ச்சியும் இவர்களிடம் குடிகொள்ளின் தமிழகம் சிறக்குமன்றே? இவர்கள் மேற்பார்வையில் உரிமை பெற்று நடைபெறும் உணவு விடுதிகட்கும் சிற்றுண்டி விடுதிகட்கும் பிறவற்றிற்கும் தமிழ்ப்பெயர்கள் இட்டு வழங்கும்படி செய்யலாம். காபி கிளப், மிலிடேரி ஓட்டல் போன்ற பெயர்கள் 'சிற்றுண்டி விடுதி' 'புலாலுணவு விடுதி' என்று மாற்றப்படல்வேண்டும். புலாலுணவுவிடுதிக்கு மறுதலையாகச் 'சைவாள ஹோட்டல்' என்று எழுதுதல் தவறு. ஏனெனில் 'சைவம்' என்ற சொல் சமயத்தைக் குறிப்பதே அன்றி மரக்கறி யுணவைக் குறியாது. பன்றி வேட்டை ஆடிய கண்ணப்பர் சைவர் என்பதை அறிக.

சாதிகள் ஒழிய வேண்டும் என்று குடியரசுத் தலைவர் முதல் குப்பை யள்ளுபவன் ஈறாக உள்ள அனைவரும் பேசி வருகின்ற இக் காலத்தில், "பிராமணுள் காபி கிளப்" என்று சாதியைக் குறிக்கும் விளம்பரப் பலகைகள் இருத்தல் மிகவும் இழிவானதல்லவா....? 'பிராமணர்' என்ற சொல்லாவது சரியாக எழுதப்படுகிறதா? சில பலகைகளில் "பிராமணுள்" என்பதும், வேறு சிலவற்றில், "பிருமணுள்" என்பதும், எழுதப்பட்டிருத்தல், தமிழ் வளர்ச்சியில் நமக்குள்ள பொறுப்பின்மையைக் காட்டுகின்றதன்றே? இப் பிழைகளையெல்லாம் ஆட்சிமன்றத்தார் மனம் வைத்தால் அறவே நீக்கிவிடலாம். ஒவ்வொரு நகராட்சி மன்றத்திலும் தமிழ்ப்புலவர் ஒருவரை அமர்த்தி, இப்பிழைகளை நீக்குமாறு செய்வது நல்லது.

### அச்சகங்கள்

நாடகம், படக்காட்சி முதலியனபற்றி வெளியிடப்படும் துண்டுத் தாள்களை அச்சிடும் அச்சகங்களில் தமிழ்ப்புலவர் இருப்பாராயின், அத்தாள்கள் நல்ல தமிழில் வெளிவருதல் கூடும். அவை பொது மக்களிடையே நல்ல தமிழைப் பரப்பும் ஆற்றல் வாய்ந்தவை. அச்சகங்களில் அச்சிடப்படும் தமிழ் நூல்களும் பிழையின்றி வெளிவருதல் இயலும். பொது மக்களிடம் தமிழைப் பரப்பும் கடமை பூண்டுள்ள அச்சகங்கள் இத்துறையில் கண்ணுங் கருத்துமாக இருத்தல் வேண்டும்.

### நூலாசிரியர்

தடியெடுத்தவன் தண்டல்காரன் என்பதுபோன்ற நிலையில், எவர்வேண்டுமாயினும் தமிழ்நூல்களை எழுதலாம என்னும் நிலை இன்றைய தமிழகத்தில் காணப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட துறையில் வல்லவராய் இருப்பவர்க்குப் பிழையற்ற தமிழ் எழுதத் தெரியவில்லை; பிழையற்ற தமிழ் எழுதத் தெரிந்தவர்க்கு அக்குறிப்பிட்ட பொருளறிவு இல்லை. இந்நிலையில் பொருளறிவும் மொழியறிவும் உடையார் இருவரும் நூலைச் செப்பனிட்டு வெளியிடுதலே மொழிவளர்ச்சிக்கு ஏற்றதாகும். இம்முறையில் அரசாங்கக் கல்வித்துறை கருத்துச் செலுத்தாதிருப்பது பெரிதும் வருந்தத் தக்கது. இவ்வாறே எவர் எந்த நூல் எழுதினும் கலவை மொழியில் எழுதாமல் தமிழ் மொழியில் எழுதல் வேண்டும் என்ற வற்புறுத்தலை அரசாங்கம் விதித்தாற்றான் தமிழ்நடை வளர்ச்சியுறும்; பாதுகாப்பும் பெறும்.

### முடிவுரை

உண்மையில் தமிழ் வளர வேண்டுமாயின் மேற்சொன்ன திருத்தங்கள் படிப்படியாக நிறைவேற்றப்படல வேண்டும். தமிழரது வாழ்வுக்கு உயிர்நாடியாக உள்ள திருமணம், கோயில் வழிபாடு முதலியன தமிழ்மொழியில்நடைபெறுதல வேண்டும். சுருங்கக் கூறின், தமிழன் தனது வாழ்வில் ஒவ்வொரு செயலிலும் தமிழை வளர்த்தல் வேண்டும்; அதன் தனித் தன்மையைப் பாதுகாத்தல் வேண்டும். இங்ஙனம் இவற்றைச் செய்யத் தமிழ்மக்கள் முற்படும் நாளே தமிழ் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்குமுரிய நன்னாளாகும்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai, Jaffna on Friday February 4, 1955.